Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12



பழைய பாடல்கள்
புதிய இசையில்..

மனதுருக்கமுள்ளவர்
பவுல்ராஜ் கென்னடி



♩ காப்பார் உன்னை காப்பார்..
♩ தொல்லை கஷ்டங்கள்..
♩ ஆதாரம் நீர்தானய்யா..
♩ சோர்ந்து போகாதே..
♩ பாடுவேன் பரவசமாகுவேன்..




Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# இனி எக்காளம்

VOL . 5 ISSUE . 12

தனிப்பிரதி ரூ 20/- ஜூலை 2012



கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்.

# பரிசுத்தம்

– நிஜா கென்னடி

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாக்குதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரிந்தியர் 7:1). கர்த்தர் மனுஷனை ஆவி, ஆத்துமா, சரீரம் என்று சிருஷ்டித்துள்ளார் (1 தெசலோனிக்கேயர் 5:23). நாம் மரிக்கும்போது, நம்முடைய சரீரத்தை விட்டு ஆவி, ஆத்துமா பிரிந்துவிடும். சரீரத்தை பூமியிலே அடக்கம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்குள் மரிக்கிறவர்களின் (இரட்சிக்கப்பட்டவர்களின்) ஆவி, ஆத்துமா தேவனிடத்தில் போகிறது. இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களும், கிறிஸ்தவர்களாய் இருந்தும் இரட்சிக்கப்படாதவர்களும் மரிக்கும்போது, அவர்களுடைய ஆவி, ஆத்துமா பாதாளத்திற்கு போகிறது. நாம் பாவத்தை விட்டு மனந்திரும்பும் போது, நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுகிறது (மறுபடியும் பிறத்தல்). இதுவே ஆத்தும இரட்சிப்பு. பாவம் செய்கிற ஆத்துமா சாகும். நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் போது, பாவம் செய்கிறோம். நாம் பாவம் செய்யும்போது, தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு துண்டிக்கப்படுகிறது. இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், பாவம் செய்து கொண்டிருப்பதால் நம் ஆத்துமா செத்துப்போயிருக்கிறது. இதுவே ஆத்தும மரணம். நாம் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும் போது, ஆத்தும மரணத்திலிருந்து, உயிர்ப்பிக்கப்படுகிறோம். அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் (எபேசியர் 2:1). கடந்த காலத்தில் உலக மக்களைப்போல, தேவனுக்கு எதிராக, நம் மனதும், சரீரமும் விரும்பியபடி பாவம் செய்ததால், ஆவிக்குரிய வாழ்க்கை செத்துப் போயிருந்தது. இரட்சிக்கப்படும் போது, தேவனுடைய கிருபையாலும், இரக்கத்தாலும் ஆவிக்குரிய மனுஷன் உயிர்ப்பிக்கப்படுகிறான். ஆவியாய் இருக்கிற தேவன், தமது பரிசுத்த ஆவியின் மூலமாக நம் ஆவியுடன் தொடர்பு கொள்கிறார்.

பரிசுத்தமுள்ள தேவன் தம்மைப் போலவே மனிதனை பரிசுத்தமாக சிருஷ்டித்தார். ஆதாம், ஏவாள் மூலமாக பாவம் மனித வாழ்வுக்குள் நுழைந்தது. பாவம் செய்ததினால் மனிதன் பரிசுத்தத்தை இழந்தான். மீண்டுமாக மனிதனை பரிசுத்தத்திற்குள் கொண்டு வருவதற்காகவே, தேவன் மாம்சத்திலே இயேசு கிறிஸ்துவாய் இந்த உலகத்திற்கு வந்தார். பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து மனிதனை மீட்டு எடுக்கவே இரட்சகர் வந்தார். **பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது** (எபிரெயர் 12:14).

நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்றும், நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தரிடமிருந்து வாக்குறுதிகளைப் பெற்றிருக்கிறோம் (1 கொரிந்தியர் 6:16-18). நாமே தேவன் தங்கும் ஆலயம். ஆதலால் நம்முடைய சரீரத்தையும், ஆவி ஆத்துமாவையும், பரிசுத்தமாக காத்துக் கொள்ளவேண்டும். நம்மை அசுத்தப்படுத்தும் எதனிடமிருந்தும் முழுமையாக விலகி நம்மை சுத்திகரித்துக் கொள்ளவேண்டும். நமது வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் சரியாக இருக்க முயற்சிக்கவேண்டும். தெய்வ பயத்தோடுகூட வாழவேண்டும். பாவத்தை விட்டு விலகி, முழுமையான பரிசுத்தத்திற்கு நேராக செல்ல வேண்டும்.

நம்முடைய தேவன் பரிசுத்தர். நாமும் தேவனைப் போலவே பரிசுத்தமுள்ளவர்களாய் மாற வேண்டும். பரிசுத்தத்தில் நாம் முன்னேறிச் செல்லவேண்டும். நாம் நடந்து கொள்ளும் முறையில், தனிப்பட்ட நடத்தை முறையில் மாறுதல், பரிசுத்தம் வேண்டும். கட்டுப்பாடுள்ளவர்களாய், இயல்பான குணத்தையுடையவர்களாய் இருக்க வேண்டும். இந்த குணங்கள்தான் விசுவாசியை உலகத்திலிருந்து வேறுபடுத்தி காண்பிக்கும். நம் சரீரத்தில் மட்டுமல்ல, ஆவி, ஆத்துமாவிலும் பரிசுத்தமாக இருக்கும் போது, நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், திருப்தியோடும் இருப்போம். வாழ்க்கை முழுவதும் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு பரிசுத்தமாக இருக்க ஒப்புக்கொடுப்போம்.

இயேசு கிறிஸ்துவை நம்பியிருக்கிற ஒவ்வொருவரும் அவரைப் போலவே தன்னை தூய்மையாக வைத்துக் கொள்கிறான் (1 யோவான் 3:3). கிறிஸ்தவ ஜீவியம் என்பது தொடர்ந்து கிறிஸ்துவைப்போல மாறுதல். இயேசு கிறிஸ்து வரும்வரை தொடர்ந்து பரிசுத்தத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். நம் வாழ்க்கையில் நடக்கும் சில சம்பவங்கள் ஒரு நோக்கத்தோடுகூட நடக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். நம்மிலிருந்து கெட்ட சுபாவங்களை அகற்றி நம்மை தூய்மையாக்குகிறது. பரிசுத்தப்படுத்துவது என்பது, நடத்தையில் ஒளிவு மறைவின்றி தொடர்ந்து நிலைத்திருப்பது, நேர்மையற்ற, ஒழுக்கமற்ற நடத்தைகளுக்கு விலகியிருப்பது. **மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்** (1 தீமோத்தேயு 5:22).

பாவத்தில் வாழ்பவர்களுடன் கலக்காமல், நம் நடத்தை குறித்து குற்றம் சொல்ல முடியாத அளவுக்கு கறையில்லாது நம்மைக் காத்துக் கொள்ளவேண்டும். பாவம் நம்மை கவர்ந்து இழுக்கும்போது தேவ வல்ல

மையால் அதை தோற்கடித்து கீழடக்க வேண்டும். சோதனைகளை, பாவ உணர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இருந்து, பாவத்தை தேவ வல்லமையால் மேற்கொண்டு பரிசுத்தமாய் இருந்தார்.

**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்தது, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாகவும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து** (1 தெசலோனிக்கேயர் 4:3-5).நாம் பரிசுத்தமாக இருக்கவே தேவன் விரும்புகிறார். திருமணத்தின்போது, கர்த்தரோடு செய்த உடன்படிக்கைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தரால் தனக்கு கொடுக்கப்பட்ட துணையை விட்டுவிட்டு, வேறொரு நபருடன் தொடர்பு வைத்திருக்கிறவர்கள் விபசாரம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த சரீரத்திற்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். நம்முடைய சரீரம் தேவனுக்கு சொந்தமானது. தேவன் தங்கும் ஆலயமாகிய நம் சரீரத்தில் விபசாரம், வேசித்தனம் ஆகிய பாவங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது (1 கொரிந்தியர் 6:15-18).

**கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.** (1 கொரிந்தியர் 6:20).

இன்று அநேகர் நல்ல நடத்தையில்லாதவர்களாக, ஒழுக்கமில்லாமல் வாழ்ந்து, தங்கள் துணைக்கு துரோகம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். சிலர் தவறு என்று அறிந்தும் துணிகரமாய் பாவம் செய்கிறார்கள். அதனால் ஏற்படும் பின்விளைவுகளை, அழிவுகளை யோசிக்காமல் பாவத்தில் ஈடுபடுகிறார்கள். இதனால் குடும்பத்தில் சண்டைகளும், போராட்டங்களும், வேதனைகளும், சஞ்சலங்களும் வருகிறது. சமாதானம் போய்விடுகிறது. பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். குடும்பங்கள் பிரிகிறது. உறவுகள் முறிந்து போகிறது. தேவகோபத்துக்குள்ளாகிறார்கள்.

மற்ற மனிதர்களும், சமுதாயமும் அவர்களை இழிவாகப் பார்க்கிறார்கள். வேலை ஸ்தலங்களிலும், கல்லூரிகளிலும், ஆலயங்களிலும்கூட அநேகர் இப்பாவங்களில் இருக்கிறார்கள். யோசேப்பு போத்திபாரின் வீட்டில் வேலை செய்தபோது, போத்திபாரின் மனைவி அவனை விபசாரம் செய்ய அழைத்தபோது, அந்த இடத்தை விட்டே ஓடிப்போனான். என் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று சொல்லி, தன் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டான்.





அவன் கர்த்தருக்கு உண்மையாய் இருந்ததினால், கர்த்தர் அவனை எகிப்து தேசத்திற்கே அதிபதியாக உயர்த்தினார். அவன் பாவத்தில், விழுந்திருந்தால், இவ்வளவு பெரிய உயர்வு, ஆசீர்வாதம் அவனுக்கு கிடைத்திருக்காது. நாமும் யோசேப்பைப்போல கடைசிவரை பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வோம். கர்த்தர் தன்னை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு அவன் இருந்ததுபோல நாமும் இருப்போம். எந்த மனிதனும் அங்கு இல்லை என்று அவன் நினைத்து பாவம் செய்திருக்கலாம். பாவம் செய்துவிட்டு பின்பு தேவனிடம் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவன் நினைக்கவில்லை. இன்று அநேகர் பாவத்தில் ஈடுபட்டுவிட்டு, தேவனிடம் மன்னிப்பு கேட்டால் மன்னித்து விடுவார் என்று சொல்லி துணிகரமாய் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள் எண்ணங்களின்படி தீர்ப்பு செய்வார்.

**ஒருவனும் தன் இளயவதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்** (மல்கியா 2:14, 15). இளமையாய் இருக்கும்போதே மணந்துகொண்ட மனைவியை ஏமாற்றக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார். கணவனும் மனைவியும் ஒரே உடலாகவும், ஒரே ஆவியை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அநேகர் மனைவி இளமையாய் இருக்கும்போது, அவளுடன் அன்பாய் இருப்பார்கள். வயதானவுடன் அவர்களை ஒதுக்கி வைத்து விடுவார்கள். திருமணமாகும்போது மனைவியை எப்படி நேசித்தீர்களோ அதே அன்பை கடைசிவரை காட்ட வேண்டும். கர்த்தருடைய வார்த்தையின்படி உண்மையாய் மனைவியை நேசியுங்கள். கர்த்தரை நேசிக்காதவர்கள் மனைவியையும் நேசிக்கமாட்டார்கள்.

**ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று** (மத்தேயு 5:28). தாவீது தன் அரண்மனையின்மேல் உலாவிக் கொண்டிருந்தபோது, ஸ்தானம் பண்ணும் ஸ்திரீயைப் பார்த்தான். பாவம் செய்ய கண்களுக்கு இடங்கொடுத்தான். மற்றொருவனின் மனைவியைப் பார்த்தான். இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பித்தது; பாவம் மரணத்தை கொண்டு வந்தது. தன் மனதில் அதைப்பற்றியே சிந்தித்து, அந்த ஸ்திரீயோடே விபச்சாரம் செய்தான். அவன் ஆத்துமா செத்துப் போயிற்று. பாவ உணர்வில்லாமல் இருந்தான். கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசியின் மூலமாக எச்சரித்தபோது, தான் செய்த பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினான்.



**தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்** (சங்கீதம்

51:10). சுத்த இருதயத்தையும் புதிய ஆவியையும் தாரும் என்று கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான்.நாமும் பாவத்தில் இருந்தால் தாவீதைப்போல மனந்திரும்புவோம்.

விபசார ஸ்திரீயினுடைய வழியை புரிந்து கொள்ள முடியாது. அவள் தன் கணவனுக்கு உண்மையில்லாமல் இருந்து, ஒரு தவறும் செய்யாத வளைப்போல நடிப்பாள் (நீதிமொழிகள் 30:20). இப்படிப்பட்டவர்கள் தேவனுக்குமுன் தான் செய்த உடன் படிக்கையை மறந்து விடுகிறார்கள். **தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து** (நீதிமொழிகள் 2:16). **வேசி ஆழமான படுகுழி; பரஸ்திரீ இடுக்கமான கிணறு** (நீதிமொழிகள் 23:27). வெளி தோற்றத்தில் நல்லவர்களைப்போல, மென்மையான வார்த்தைகளைப் பேசுவார்கள். உள்ளமோ நம்பிக்கை துரோகத்தினாலும், நய வஞ்சகத்தினாலும் நிறைந்திருக்கும். அநேக குடும்பங்கள் அழிந்து போவதற்கு காரணமாய் இருப்பாள். பல ஆண்களை பாவத்தில் விழச் செய்கிறவளாய் இருப்பாள். விபச்சார குணமுள்ள பெண் கவர்ச்சியாக இருந்து, பிறரை மகிழ்வித்து, தன்பால் ஈர்க்கும் குணத்தை உடையவளாய் இருப்பாள். முறைகேடாக நடந்து, உணர்வில்லாத இருதயத்தோடு இருப்பாள். முறைகேடான தவறான தொடர்புகள் சரீர நோய்களை கொண்டு வருகிறது. தேவனுடைய கட்டளைகளுக்கு எதிரானது.

தவறான உறவு வைத்திருப்பவர்களின் மனசாட்சி குத்திக்கொண்டே இருக்கும். அவர்களால் நிம்மதியாக இருக்க முடியாது. ராகாப் என்ற வேசி கர்த்தரை விசுவாசித்தபோது, தன் ஜனங்களோடுகூட அழிக்கப்படாமல், தான் வாழ்ந்த தவறான வாழ்க்கையை விட்டு கர்த்தருடைய ஜனங்களோடு கூட பாதுகாக்கப்பட்டாள். நாமும் செய்த பாவத்தை விட்டு மனந்திரும்பும்போது, இயேசு கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து விடுவித்து அவருடைய பிள்ளைகளாக மாற்றி பரிசுத்தப்படுத்தி விடுகிறார். தொடர்ந்து பரிசுத்தத்தில் நிலைத்திருக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கேட்டுப் பெற்றுக் கொள்வோம்.

சிம்சோன் இஸ்ரவேலரை இருபது வருடங்கள் நியாயம் விசாரித்தான். அவன் இஸ்ரவேலரை பெலிஸ்தியரிடமிருந்து பாதுகாத்தான். கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கும் போது பலத்த காரியங்களைச் செய்தான். இயற்கைக்கு அப்பாற்பட்ட பலத்தையும், ஆற்றலையும் கர்த்தர் அவனுக்குக் கொடுத்தார். நன்னடத்தை இல்லாததால் முடிவில் அழிவுக்கு நேராக சென்றான்

சிம்சோன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஒரு வேசியிடத்தில் போனான் (நியாயாதிபதி 16:1). பின் தெலீலாள் என்னும் ஸ்திரீயை நேசித்தான். பெலிஸ்தியரின் ஐந்து அதிபதிகள் அவளிடம் வந்து, சிம்சோனின் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்பதை அறிந்து எங்களுக்கு சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். இந்த இரகசியத்தைச் சொன்னால் நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசை உனக்கு கொடுப்போம் என்றார்கள். அதனால் தெலீலாள் உன் பெலன்



எதினால் என்று சிம்சோனிடம் கேட்டுக் கொண்டேயிருந்தாள். மூன்று முறை அவன் உண்மையை சொல்ல வில்லை. மூன்று முறையும் அவன் சொன்னபடி அவனைக் கட்டி, பெலிஸ்தியரிடம் அவனைப் பற்றிய தகவல்களைச் சொல்லி அவர்களை வரவழைத்தாள். மூன்று முறையும் அவனை அவர்களால் பிடிக்க முடியவில்லை.

தினந்தோறும் அவனிடம் பலத்தின் இரகசியத்தைச் சொல்லும்படி, தொந்தரவு செய்து கொண்டிருந்தாள். இறுதியில் தன் பலத்தின் இரகசியத்தைக் கூறினான். நான் பிறந்தது முதல் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவன். சவரன் கத்தி என் தலைமேல் படவில்லை. என் தலைமயிரை நீக்கினால், எனது பலத்தை இழந்து விடுவேன் என்று கூறினான். அவள் பெலிஸ்தியரை வரவழைத்து, அவன் தலை மயிரைச் சிரைத்து அவனைச் சிறுமைப்படுத்தினாள். அவன் பலம் அவனை விட்டுப்போயிற்று. பெலிஸ்தியர் அவனைப்பிடித்து சக்கிலியால் கட்டி அவன் கண்களைப் பிடுங்கி, அவனை மாவரைக்க வைத்தார்கள்.

தெலீலாள் சிம்சோனை மூன்று முறை காட்டிக் கொடுத்தபோதும், இச்சையினால் அவன் அதைக் காணமுடியவில்லை. இச்சை அவன் கண்களை மூடிப்போட்டது. அவள் எப்படிப்பட்டவள் என்பதை அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவனாயிருந்தும் மாம்ச இச்சைக்கு அடிபணிந்து, இலக்கை விட்டு விலகினான். தன் பலத்தின் இரகசியத்தை குறித்து அவளுக்குச் சொல்லி தன் ஆற்றலை இழந்து போனான். தேவனுக்கு கீழ்ப்படியாமல், இச்சை என்னும் பாவத்தில் விழுந்ததால் எதிரிகளின் கையில் விழுந்தான்.

ஆனால், அவன் தான் செய்த தவறை உணர்ந்து, மனந்திரும்பி, மறுபடியும் கர்த்தரிடம் வந்தான். அவன் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான். அவன் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுத்தார். பெலிஸ்தியர் சிம்சோனைப் பிடித்ததால், சந்தோஷத்தோடு ஒரு வீட்டில் கூடியிருந்தனர். சிம்சோனையும் அங்கு கொண்டு வந்தனர். சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, கர்த்தராகிய ஆண்டவரே, பெலிஸ்தியர் கையிலே பழிவாங்கும் படிக்கு இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே பலப்படுத்தும் என்று சொல்லி, அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு தூண்களில் ஒன்றை தன் வலது கையிலும் மற்றொன்றைத் தன் இடது கையிலும் பிடித்துக்கொண்டு அந்தத் தூண்களை தள்ளினான். அந்த வீடு இடிந்து பெலிஸ்தியரில் மூவாயிரம் பேர் மரித்தார்கள்.

சிம்சோன், இச்சை என்னும் பாவத்தில் விழுந்து, தன் கண்களை இழந்து, எதிரிகளோடுகூட மரித்து போனான். ஆனால், மனந்திரும்பி மறுபடியும் கர்த்தரண்டை வந்தான். நாமும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தால், பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி உடனே மனந்திரும்புவோம். உண்மையான இருதயத்தோடு செய்த பாவத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்போது, இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் நம்மை கழுவி சுத்திகரித்து நம்மை பரிசுத்தப்படுத்தி விடுகிறார். **தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல**

**பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் (1 தெசலோனிக்கேயர் 4:7).**

மாம்ச இச்சை, உலக இச்சைகளுக்கு விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். பாவம், தொடர்ந்து துன்பங்களையும், இடர்பாடுகளையும் கொண்டுவந்து நம்மை விழுந்து போகப்பண்ணும். நம்மை அடக்கி ஆளுகை செய்யும். பாவம் நம்மை கவர்ந்து இழுக்கும்போது, அதை எதிர்த்து போராடி மேற்கொள்ள வேண்டும். நாம் பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம். பாவம் செய்யக்கூடாது என்ற உறுதியோடு இருக்க வேண்டும்.

**வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப் படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்** (மத்தேயு 15:18,19). இயேசு கிறிஸ்து ஜனங்களிடம், நாம் சாப்பிடும் உணவு நம்மை தீட்டுப்படுத்தாது என்றும் நாம் பேசும் வார்த்தைகளே நம்மை தீட்டுப்படுத்துகிறது என்றும் கூறினார். வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் இருதயத்திலிருந்து தோன்றுகிறது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாம் பேசும் வார்த்தைகளை வைத்தே நம் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். நம் இருதயத்தின் ஆழத்தில் என்ன இருக்கிறது என்றும், நம் சிந்தனைகளையும் தேவன் மாத்திரம் அறிந்திருக்கிறார். மனிதர்கள் அதை அறியமாட்டார்கள்.

நம்முடைய இருதயத்தை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கும் போது, அவர் நம்முடைய இருதயத்தை புதிதாக மாற்றி விடுகிறார். பழைய சிந்தனைகளை எடுத்துப் போடுகிறார். நமக்கு புதிய எண்ணங்கள், புதிய குறிக்கோள்களைத் தருவார். நாம் கர்த்தரிடம் என்னை புதிய மனிதனாக மாற்றும் என்று கேட்கும்போது, நமக்குள்ளே தொடர்ந்து மாறுதல்கள் உண்டாகிறது. சுத்த எண்ணங்களை, நல்ல சிந்தனைகளைத் தாரும் என்றும் நாம் கேட்க நம் தேவன் விரும்புகிறார்.

அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே, புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (எபேசியர் 4:22-24). நாம் கடந்த காலத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன் பாவத்தில் வாழ்ந்தோம். பழைய பாவ சுபாவங்களை முற்றிலுமாக விட்டு விட வேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாய் மாறிவிட்டோம் என்ற உணர்வோடு, பாவத்துக்கு விலகி தினமும் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய உணர்ச்சிகளையும், அதிக விருப்பங்களையும், கட்டுப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். பாவத்தை



செய்வதினால் வரும் பின்விளைவுகளைப் பற்றி சிந்தித்து பாவத்தை மேற்கொள்ளவேண்டும். கிறிஸ்துவை தலையாக வைத்து, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும்.

**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்கள் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே** (1 பேதுரு 1:15,16). மாம்சம் விரும்பியபடி செய்யாமல் தேவனைப்போல பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்ற உறுதியோடு இருக்கவேண்டும். பரிசுத்தவான் எப்பொழுதும் விழிப்புணர்வோடு இருப்பான். தனது மனதை சுத்தமாக வைத்திருப்பான். தேவையில்லாத காரியங்களை அகற்றிவிட்டு தேவனோடுகூட ஐக்கியமாய் இருந்து, அவரோடுகூட நடப்பான். **சகல நற்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்** (1 பேதுரு 2:2,3). கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகி, பொய் பேசாமல், மற்றவர்களைக் குறித்து தீமையாய் பேசாமல், வேத வார்த்தையை வாஞ்சையோடு படிக்கும்போது, ஆவிக்குள்ளாக வளரலாம்.

ஒருவருக்கொருவர் உள்ள உறவுமுறையில் உண்மையாக, நேர்மையாக, தூய்மையாக இருப்போம். மாம்சத்தின் செயல்களுக்கும், விருப்பங்களுக்கும் நாம் இசைந்து போகாமல் நடக்க வேண்டும். நம் சுயவிருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாய் இல்லாமல், தேவசித்தத்தை நிறை வேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும்.

அநேகர் கர்த்தருக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்துவிட்டு (இரட்சிப்பை பெற்றுவிட்டு) மறுபடியும் தங்கள் பழைய வழிகளுக்கு சென்று விடுகிறார்கள். பரிசுத்தமாயிருப்பது என்பது முற்றிலுமாக நம்மை அவருக்கென்று அர்ப்பணிப்பது. உலக மக்களோடு நாம் கலந்திருக்காமல் விலகியிருக்க வேண்டும். தேவனுடைய தன்மை நம்மிலிருந்து வெளிப்பட வேண்டும். அவர்மேல் நம் கவனம் முழுவதும் இருக்கவேண்டும். அவருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாம் சுயமாக பரிசுத்தமாக இருக்க முடியாது. தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்து, அவருக்கு கீழ்ப்படிந்து நடக்கவும், அவருடைய வல்லமையை நமக்கு கொடுத்து பாவத்தை மேற்கொள்ளவும் உதவி செய்வார்.

**அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று..** (ரோமர் 12:1). உலக மக்களைப்போல வாழவேண்டும் என்று நம்மை மாற்றிக் கொள்ளக் கூடாது. தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாய், தேவனுக்கு பிரியமானது எது, பிரியமில்லாதது எது என்பதை அறிந்து அதன்படி நம் மனதை மாற்றிக் கொள்ளவேண்டும்.

நம்மைக் குறித்து முழு நிறைவான நல்ல திட்டங்களை வைத்திருக்கிறார். நம்மை முற்றிலுமாக மாற்றி, புதிய மனதை உடையவர்களாய், தேவனைக் கனப்படுத்துகிறவர்களாக, அவருக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருக்க நம் தேவன் விரும்புகிறார். நாம் சந்தோஷமான, சமாதானமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என விரும்புகிறார். தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொடுத்து, அவருடைய இரத்தத்தினால் நம்முடைய பாவங்களை கழுவி நம்மை சுத்திகரித்து, நமக்கு புதிய வாழ்க்கையை உண்டு பண்ணியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள், உலகத்தாரைப் பின்பற்றி வாழக்கூடாது. உலகத்தார் நடந்து கொள்ளும் முறையும், பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் சுயநலமுள்ளதாகவும், நேர்மையற்ற தாகவும் இருக்கும். பெருமையாக இருப்பது, பிறருக்கு உரிமையான பொருட்கள் அல்லது பணத்தை அடைய ஆசைப் படுவது (தகாத விருப்பம்), சுய நலம், தான் செய்ய வேண்டுமென்று மற்றவர்கள் விரும்புவதைச் செய்ய விரும்பாத குணம் (பிடிவாதமுடைய) பிறரைவிடத் தன்னை மேலாகவும், முக்கியமானவராகவும் கருதுவது (தற்பெருமை) ஆகிய குணங்களை அகற்ற வேண்டும். ஒருவருக்கொருவர் பொய் சொல்லுவது, ஒருவர்மேல் இருக்கும் நம்பிக்கையை அழித்து விடும். உறவுகளை முறிக்கிறது. **தன் வாயையும், தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்** (நீதிமொழிகள் 21:23). மிகைப்படுத்தி பேசுவது, வதந்திகளை பரப்புவது, மற்றவர்களைப்பற்றி பேசுவது, அவர்களுடைய அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிப் பேசுவது, உண்மைக்கு புறம்பான வம்பு பேச்சுகளை பேசுவது ஆகிய குணங்களை விட்டுவிடுவோம். பரிசுத்த ஆவியினால் அபிஷேக்கிக்கப்படும்போது, நாம் புதுப்பிக்கப்படுகிறோம். **உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்ற மற்றதாயிருக்கும்படி, காக்கப்படுவதாக** (1 தெசலோனிக்கேயர் 5:23).


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






# எது உங்களது பொக்கிஷம் ?

**– ஏஞ்சலின் தீப்தி**

**உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்** (லூக்கா 12:34). எது உங்கள் நினைவில் எப்போதும் இருக்கின்றது? ஒரு நாளில் எதை அதிகமாக நினைக்கின்றீர்கள்? உங்கள் இருதயத்தில் எது ஆழமான சிந்தனைகளாக உள்ளது? இந்த கேள்விகள், உங்களது பொக்கிஷம் என்ன என்பதற்கானப் பதிலைத் தரும். மற்றவர்களிடமிருந்து நாம், நமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மறைக்கலாம். ஆனால், நமக்கு தெரியும், நமக்குள் இருக்கும் எந்த காரியம் நாம் நடந்து கொள்ளும் விதத்திற்கு காரணமாக உள்ளது என்பதை. நமது அறிவிற்கு அப்பாற்பட்டு நாம் செய்வதெல்லாம் அதை அடிப்படையாக வைத்தே. கர்த்தருடைய இடத்தில் வேறு ஏதாவது காரியம் வரும்போது, காரியங்கள் தவறாக நடக்க ஆரம்பிக் கிறது.

மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 19:24). ஐசுவரியவானான வாலிபனொருவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து, நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அவன் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். இயேசு கிறிஸ்து, அவன் நித்திய ஜீவனைப் பெறுவதற்குத் தடையாக ஒரு காரியம் இருப்பதைக் கண்டார். அவனிடம் உள்ளதை ஏழைகளுக்கு கொடுக்கும்படி சொன்னார். இங்கே அவனை ஏழையாக்குவது கர்த்தரது நோக்கமல்ல. அவனது வாழ்க்கையில் எது முக்கியம் என்பதில் மாற்றத்தை உண்டாக்கவே. நமக்கும் இயேசு கிறிஸ்துவிற்கும் நடுவில் எதுவும் வரமுடியாது. மேலும், அந்த ஐசுவரியவான் இயேசு கிறிஸ்து சொன்னது போல, தன்னிடமிருந்ததை ஏழைகளுக்குக் கொடுத்திருந்தால், இப்பொழுதுள்ள வாழ்க்கையில் ஆயிர மடங்கு கர்த்தரிடமிருந்து பெற்றிருக்கலாம் (மத்தேயு 19:29). மேலும் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்திருக்கலாம்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: **இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக்**

குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் (யோவான் 4:13,14). நமக்கும், நம்மை சிருஷ்டித்தவருக்குமிடையே உள்ள உறவு மாத்திரமே, நமக்கு போதுமென்கிற மனதையும், சந்தோஷத்தையும் தரமுடியும். நாம் அவரோடு ஒன்றாக இருக்கும்படியாகவே சிருஷ்டிக்கப்பட்டோம். அவருடைய இடத்தில் வேறு ஒன்றை வைக்கும்போது, அது ஆரம்பத்தில் நல்லதாகத் தோன்றலாம். அது நாம் தவறான பாதையில் செல்வதாகும். கண்டிப்பாக மறுபடியும் நாம் அவரைப்பற்றிய தாகம் கொள்வோம். அவருக்கு மாற்று ஒன்றும் கிடையாது.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33). நாம் கர்த்தருக்கு, அவருக்குரிய இடத்தைக் கொடுக்கும்போது, நமக்கு அவர் முதன்மையாகும்போது, எல்லாமே நமக்கு கொடுக்கப்படுமென்று உறுதி தருகிறார். நமது உலகப்பிரகாரமான தேவைகளையும், பாதுகாப்பையும், அவர் பொறுப்பெடுத்துக் கொள்கிறார். சில சமயங்களில் நமக்கு அன்றன்றைக்குத் தேவையான மன்னாவை அவர் கொடுக்கலாம். ஒன்றை உறுதியாக நாம் கொள்ளலாம், வானத்தின் பலகணிகள் திறக்கப்படும், அளவற்ற ஆசீர்வாதங்கள் ஊற்றப்படும், நாம் அவரை முதலிடத்தில் வைப்பதில் விசுவாசமாய் இருக்கும்போது. தேவனுடைய ராஜ்யத்தின் நீதி, நாம் வாழும் இந்த உலகத்தின் நீதிக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். நாம் இயேசுவை நமது வாழ்வின் மையமாக வைக்கும்போது, நமது வாழ்வின் ஆளுமையை அவருக்குக் கொடுக்கிறோம். அவர் நம்மை பொறுப்பெடுத்து, சரியான பாதையில் நடத்துகிறார்.

ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 17:28). இயேசு நமது சுவாசமாக இருக்க வேண்டும். அவர் நம்மோடு ஐக்கியமாய் இருப்பதற்கு வாஞ்சிக்கிறார். நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்முடன் இருப்பதற்கு விரும்புகிறார். நாம், அவருடைய ஆலோசனையையும் ஞானத்தையும் சார்ந்துகொள்ளும்போது, நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் நம்முடனிருக்க விரும்புகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார் (சங்கீதம் 103:14).

தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் (புலம்பல் 3:25). அவரை நாம் முதன்மையாக வைப்பது எப்படி? அவரது வார்த்தையை படிப்பது நமது நாளின் தொடக்கமாக இருக்கவேண்டும். அவரோடு ஐக்கியமாய் இருக்க வேண்டும். அவரது கற்பனைகளை படிக்க, தியானிக்க வேண்டும். நாம், அவரது வார்த்தையைப் படிக்கும்போது, அதைக்குறித்து தியானிக்கும்போது, அதை அவர்



நமது இருதயத்தில் எழுதுகிறார் (ரோமர் 10:8).

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள் (2 கொரிந்தியர் 13:5). நமது விசுவாசமும், கர்த்தர்மேல் உள்ள நமது அன்பும், உண்மையானதா? அல்லது போலித்தனமா? (சதுசேயரின் வெளிப்புற மான பக்தி வேஷம்போல) என்பதை எப்படி அறிந்து கொள்வது? கடினமான காலங்கள் - இந்தக் காலங்களில் நமது வாழ்வில் சூறாவளி அடிக்கும், நாம் நிச்சயமாக சிதறிப்போவோம் என்று எண்ணும் அளவிற்கு. இயேசுவில் நமது அஸ்திபாரம் பலமாக இருந்தால், நாம் புயலிலிருந்து வெளிவரும்போது, நாம் பலமாக இருப்பதை பார்ப்போம், இன்னும் இயேசுவில் பலப்படுவோம். அப்போஸ்தலனாகிய பவுல், 2 கொரிந்தியர் 4:8-9ல் இதை விளக்கி சொல்லுகிறார்: நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம், யோபைப்போல உறுதியாக நிற்க வேண்டும். நமது விசுவாசத்தை விட்டுவிடக்கூடாது. நமது வாழ்க்கையில் சூழ்நிலைகளைக் காட்டிலும் இயேசுவை மேலாக வைத்திருக்கிறோம் என்பதை அது காட்டுகிறது. அப்படி நாம் வளரும்போது, சங்கீதம் 1:3-ல் சொல்லப்பட்டுள்ளதுபோல செழிப்படைவோம். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:3). அவரை முதலாவதாக வைத்திருப்பவர்கள் மாத்திரமே உயர்ந்த மலைகளின் மீது நடப்பார்கள். இயேசுவே நமது வாழ்வின் விலையேறப்பெற்ற பொக்கிஷமாக இருக்கவேண்டும். அவரில்லாமல் நாம் ஒன்றும் செய்யமுடியாது. அவருடைய வார்த்தையை படிக்காமல், அவரோடு ஐக்கியம் கொள்ளாமல் ஒரு நாளும் உங்கள் வாழ்வில் கடக்கவில்லை என்பதை நீங்கள் அறியும்போது, நீங்கள் தெரிந்து கொள்ளலாம், அவர் உண்மையிலேயே உங்களுடைய பொக்கிஷமாக இருக்கிறாரென்று. இது இயேசு உங்கள் வாழ்வின் ஆதாரமாக ஆனதினாலே. இயேசு உங்களது வாழ்வில் இதயமாக இருக்க நீங்கள் வாஞ்சித்தால், அவர் உங்களுக்கு அதிகமாக தேவை என்று உண்மையாய் ஜெபியுங்கள். உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு மிக சமீபமாய் அவர் இருக்கிறார் என்ற வாக்குத்தத்தின்படி உங்களுக்கு அருகில் அவர் வருவார் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். அவரது வார்த்தையை ஒவ்வொரு நாளும் படித்து, விசுவாசத்தோடு ஆரம்பிப்போம். சீக்கிரத்திலே அவர் நமது வாழ்வின் மையமாகிவிடுவார் என்பதில் உறுதியாக இருப்போம்.



# கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது எப்படி?

– ஆன்ட்ரு வோமக்

நாம் தொடர்ந்து கர்த்தர் யாரிடம், எப்படி பேசுவார் என்பதை குறித்து தியானித்து வருகிறோம். இந்த இதழில் சகோதரர். ஆன்ட்ரூ வோமக் பகிர்ந்து கொண்டுள்ளதை பார்ப்போம்.

இரட்சிக்கப்படுவதின் மேலான பலன்களிலொன்று கர்த்தர் நம்முடன் பேசுவதைக் கேட்பதாகும். இதைத்தவிர நம் பரம தகப்பனோடு நெருங்கி இருக்கிற காரியம் வேறு எதுவும் இல்லை. அவரோடு நாம் பேசுவது எவ்வளவு இலகுவானதோ அதேபோல, அவர் பேசுவதை நாம் கேட்பதும் இலகுவானதே. ஆனால், ஒரு சராசரி கிறிஸ்தவனுக்கு இது கஷ்டமான காரியமாகும். அப்படி ஒரு கஷ்டமான காரியமாக இருப்பது கர்த்தருடைய நோக்கமல்ல.

கர்த்தருடைய சத்தத்தை இனங்கண்டு கொள்வது விலைமதிப்பில்லா காரியமாகும். குருட்டுத்தனமான ஒரு வாழ்வை வாழ்வதைக் காட்டிலும், கர்த்தருடைய ஞானத்தின்படி நடப்பது நமக்கு பாதுகாப்பாகும். கர்த்தருடைய சத்ததைக் கேட்டு வாழ்க்கை மாறாதவன் ஒருவனும் இருக்க முடியாது. திருமண வாழ்வின் எப்பேர்ப்பட்ட பிரச்சனையும் கர்த்தருடைய ஒரு வார்த்தையால் சரியாகும். உங்களுக்கு எப்பேர்ப்பட்ட வியாதி இருந்தாலும், கர்த்தரிடத்திலிருந்து வரும் ஒரு வார்த்தை உடனடியாக சுகத்தைத் தரும். உங்களது பண நெருக்கடியான சூழ்நிலையை எப்படி மாற்றுவது என்று கர்த்தருக்குத் தெரியும். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதே காரியம்.

கர்த்தர் நம்மோடு தொடர்ந்து தம்முடைய ஆலோசனைகளையும், வழிநடத்துதலையும் பேசிக் கொண்டுதான் இருக்கிறார். நாம்தான் அதைக் கேட்காமல் இருக்கிறோம். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதைக் குறித்து, குறிப்பாக இயேசு கிறிஸ்து பேசியிருக்கிறார். அவர், தம்மைக் குறித்துதான் பேசியிருக்கிறார். அவருடைய மந்தையிலுள்ள ஆடுகள் மேய்ப்பனாகிய அவருடைய சத்தத்தைக் கேட்குமென்று கூறியிருக்கிறார். ‘‘என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்கும்’’ என்கிறார். கேட்கலாம் என்றும் சொல்லவில்லை. கேட்பதாகவேக் குறிப்பிடுகிறார். கண்டிப்பாகக் கேட்கவேண்டும் என்றும் சொல்லவில்லை. மிகவும் சாதாரணமான ஒரு காரியமாக, அவருடைய சத்தத்தைக் கேட்பதைக் குறித்து சொல்லுகிறார். அநேகக் கிறிஸ்தவர்களுக்கு இந்த அனுபவம் இல்லாததால் அவர் இப்படி சொல்லியிருப்பது கேள்விக் குறியாகும். இயேசு கிறிஸ்து சொல்லியிருப்பது தவறல்ல, உண்மை. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறார்கள். ஆனால், இதுதான் கர்த்தருடைய சத்தம் என்று இனங்கண்டு கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.

ரேடியோ மற்றும் டெலிவிஷனில் 24 மணி நேரமும் நிகழ்ச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எப்போது அவைகளை இயக்குகிறோமோ அப்போது மட்டும்தான் சத்தத்தைக் கேட்க முடியும். நமது ரேடியோவில், டெலிவிஷனில் அந்த குறிப்பிட்ட அலைவரிசை கிடைக்கவில்லையென்றால், அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகவில்லையென்பதல்ல அர்த்தம். அதேபோல, கர்த்தரும் நம்மோடு தொடர்ந்து பேசிக் கொண்டுதானிருக்கிறார். ஆனால், வெகு சிலரே அதைக்கேட்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தியிருக்கிறோம். அநேகர் தங்களுக்கு பிரச்சனை வரும்போது மாத்திரமே, கர்த்தர் தங்களோடு பேசவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள்.

முதலாவது, நம்மை தயார் செய்ய வேண்டும். ஏற்கனவே கர்த்தர் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார் என்றும், நீங்கள் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், விசுவாசியுங்கள். எப்படியானாலும், அதற்கு நேரம், முயற்சி, கவனம் தேவை. சராசரி கிறிஸ்தவனுடைய வாழ்க்கை மிகவும் பரபரப்பானதொன்றாக இருப்பதால் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது சுலபமானதொன்றல்ல. இன்றைக்கு நாம் எல்லோருமே பரபரப்பாக இருக்கவே விரும்புகிறோம். அதனாலேயே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது கடினமான காரியமாக உள்ளது.

சங்கீதம் 46:10 சொல்லுகிறது, ‘‘அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்’’ என்று. அமர்ந்திருப்பதாகும், பரபரப்பாக இருப்பது அல்ல. இதுவே நமது ஆவியின் காதுகளை கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு ஆயத்தப்படுத்துவது. கர்த்தர் எப்போதும் அமர்ந்த மெல்லிய சப்தம் மூலமாகவேப் பேசுகிறார் (1 இராஜாக்கள் 19:12). நமது அன்றாட வாழ்வின் சப்தங்கள் அதைக் கேட்கவிடாமல் செய்துவிடுகின்றது.

இரண்டாவது, மிக முக்கியமானதுமான காரியம், நமது சிந்தனைகளை நாம் கர்த்தருடைய சத்தம் என்று அநேக நேரங்களில் தவறாக நினைத்துவிடுகிறோம். கர்த்தருடைய சத்தம், நமது சிந்தனைகளில் வரும். யோவான் 4:24 சொல்லுவதுபோல, ஆவியாயிருக்கிற தேவனோடு நாம் ஆவியினாலேயே தொடர்பு கொள்ள வேண்டும். அது மூளையிலிருந்து மூளைக்கோ, வாயிலிருந்து காதுக்கோ அல்ல. கர்த்தர் நம்முடைய ஆவியுடன் பேசுகிறார். வார்த்தைகளாய் அல்ல, யோசனைகளாய், உணர்த்துதலாய் நம்மோடு இடைபடுகிறார். பின்பு, நமது ஆவி நம்முடன் வார்த்தைகளாய் பேசுகிறது. இப்படிப்போல: ‘‘நான் நினைக்கின்றேன், கர்த்தர் என்னை இதையோ அல்லது அதையோ செய்யச் சொல்லுகிறார் என்று’’. கர்த்தர், ‘‘இதைச் செய், அதைச் செய்யாதே’’ என்று சொல்லமாட்டார். ஒன்றை செய்ய உங்கள் ஆவியில் உணர்த்துவார். அதன்பின், உங்கள் ஆவி உங்களிடத்திலே இப்படி சொல்லும்: ‘‘நான் இதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றேன்’’. அதனால்தான் நாம் அநேக நேரங்களில் ஆவியானவரின் ஏவுதலை பெறத் தவறுகிறோம். ஏனென்றால், அதை நமது சிந்தனை என்று நினைக்கிறோம்.

- தொடரும்